இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 01-01-2025


# வான்புகழ் வள்ளுவர் - 1



**வா**ன்புகழ் வள்ளுவருக்கு வானுயர் சிலை அமைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்! கலைஞர் அமைத்த சிலைக்கு வெள்ளிவிழா காண்கிறார் திராவிடவியல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்! மூன்று நாட்கள் (2024 டிசம்பர் 30,31, 2025 சனவரி1) விழாக் கோலம் காண்கிறது குமரி முனை!

**“மற்ற அனைத்தையும் ஒரு தட்டிலிட்டு, திருக்குறள் எனும் செந்தமிழ் நூலை ஒரு தட்டில் வைத்தால், குறளே வலிமையாய் இருக்கும்”** என்றார் யாழ் நூல் யாத்த விபுலானந்தர்.

அத்தகைய வான்புகழ் வள்ளுவருக்கு குமரி முனையில் 133 அடிக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆகிறது. **‘கடல் அலை நடுவே இருக்கும் தமிழ்மலை’** என்று அந்தச் சிலைக்கு புகழாரம் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். **“முத்தமிழறிஞர் கலைஞர் எதைச் செய்தாலும் கலை நுணுக்கத்தோடு பார் போற்றும் வகையில் செய்வார் என்பதற்கு விண்ணைத் தொடும்வண்ணம் உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலையும் ஒரு சான்றாகும். இத்தகைய பெருமை மிகு சிலை வெள்ளி விழா காண்கிறது.”** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

2000 ஆம் ஆண்டின் தொடக்க நாளில் குமரி முனையில் சிலை எழுந்தது. அந்தக் காட்சி எப்படி இருந்தது என்பதை தலைவர் கலைஞர் அவர்களே விவரித்துள்ளார்கள்...

**“கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டுகளித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட காட்சி”** என்று இதைப் பற்றி தலைவர் கலைஞர் எழுதி இருக்கிறார்கள்.

**“அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதஸ்வர இசைவாணர்களும், தவில் வித்வான்களும் அவர் தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கும் மேற்பட்டோர், அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம். மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு மெய்மறந்து போயிருந்திருக்கிறேன். சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன்”** என்று எழுதி இருக்கிறார் கலைஞர்.

இந்த உணர்ச்சிக்கு என்ன காரணம்? தனது வாழ்நாளில் எத்தனையோ பேருக்கு நினைவு மண்டபங்கள், சிலைகள் அமைத்தவர் தலைவர் கலைஞர். ஆனால் திருக்குறள் - திருவள்ளுவர் என்றதும் உணர்ச்சியின் உச்சிக்கு கலைஞர் செல்ல என்ன காரணம்?

திருவள்ளுவர் என்பவர் திருக்குறள் என்ற இலக்கியம் படைத்தவர் என்பது அல்ல. உலகுக்கே அறத்தைச் சொன்னவர் என்பது மட்டுமல்ல. உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது என்பது அல்ல. திருவள்ளுவர்தான் தமிழினத்தின் காப்பரண் என்பதால்தான் தமிழினத் தலைவர் உணர்ச்சி வசப்படுகிறார்.

இது தந்தை பெரியார் மூலமாக விதைக்கப்பட்ட விதை ஆகும். திராவிடர் கழகத்தை திருக்குறளைப் பின்பற்றும் கழகமாகச் சொன்னார் பெரியார். மனுதர்மத்தை நீக்கிவிட்டு அந்த இடத்தில் திருக்குறளை வைக்க வேண்டும் என்றார். மனிதத்தன்மை உருவாக குறள்தான் வழிகாட்டி என்றும் சொன்னார். ஆரியத்தை மறுக்க எழுதப்பட்ட நூல் திருக்குறள் என்றும், புத்தர் செய்த வேலையைத்தான் வள்ளுவர் செய்தார் என்றும், நமது நெறி குறள்நெறி என்றும், நமது மதம் குறள் மதம் என்றும் சொன்னார்.

‘நான் திராவிடனே- திருக்குறளானே’ என்று அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கட்டளையிட்டார். ஆரியத் தன்மை கொண்ட கருத்துக்கள் அதில் இருந்தாலும் அவை இடைச்செருகல்களே என்றார். அதற்காக குறள், எல்லாக் காலத்துக்கும் அப்படியே பொருந்தும் என்றும் அவர் சொல்லவில்லை. ‘குறளை விமர்சிக்கும் காலமும் வரும்’ என்றும் சொல்லி இருக்கிறார். ‘வள்ளுவரை மறைத்த இனமே புத்தரை ஒழித்தது, காந்தியையும் கொன்றது’ என்றவர் பெரியார். திருக்குறள் மாநாடுகளை நடத்தினார். குறைந்த விலையில் திருக்குறளை அச்சிட்டு வழங்கினார். ஏப்ரல் 12 ஆம் நாளை திருக்குறள் நாளாக அறிவித்துக் கொண்டாடச் சொன்னார் பெரியார்.

* **பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
  **செய்தொழில் வேற்றுமை யான்.**
* **இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
  **கெடுக இவ்வுலகியற்றி யான்.**
* **குடிசெய் வார்க்கில்லை பருவம் மடிசெய்து**
  **மானங் கருதக் கெடும்.**
* **தெய்வத்தாற் ஆகாது எனினும் முயற்சிதன்**
  **மெய்வருத்தக் கூலி தரும்.**
* **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
  **மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

- ஆகிய குறள்களை அடிக்கடி மேற்கோள் காட்டினார் பெரியார்.

**“திருக்குறளைக் கற்றுக் கொள்வதால் நீங்கள் செம்மையடையலாம். நீங்கள் செம்மை அடைவதால், நாடு செம்மைப்படும். நாடு செம்மைப்படுவதால் உலகு செம்மைப்படும்”** என்று சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தலைநகர் சென்னைக் கடற்கரையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது சிலை வைத்தவர் பேரறிஞர் அண்ணா. அந்த வழித்தடத்தில் வந்த முத்தமிழறிஞர் கலைஞர், குமரி முனையில் அய்யன் வள்ளுவருக்கு வானுயரச் சிலை வைத்தார்.

சிலை மட்டுமா அது? கலைஞர் உருவாக்கிய கலைச் சின்னம் அல்லவா அது?

**- தொடரும்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.12.2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையில் அமைக்கப்பட்டுள்ள சீரொளிக் (லேசர்) காட்சியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, திருமதி துர்கா ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர்.அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், கன்னியாகுமரி கடற்கரையில் மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் அவர்களால் வடிவமைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் மணல் சிற்பத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு. தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், சொல்வேந்தர் சுகி.சிவம் தலைமையில் “திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே! சமுதாயத்திற்கே!” எனும் தலைப்பில் நடைபெற்ற சிறப்புப் பட்டிமன்றத்தைப் பார்வையிட்டார். இந்நிகழ்வில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், திருமதி. துர்கா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என். நேரு, இ.பெரியசாமி. முனைவர் க.பொன்முடி, எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கல்லூரி மாணவியரிடமும் – அவர்களின் பெற்றோர்களிடமும்

# அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்வது அருவருக்கத்தக்க செயல்!

### சமூகநலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

*சென்னை, ஜன. 1 -*

கல்லூரி மாணவியரிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்வது அருவருக்கத்தக்க செயல் என்று சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

எங்கே எது நடக்கும். அதில் நமக்கென்ன அரசியல் ஆதாயம் கிடைக்கும் என அலைந்து கொண்டிருக்கும் பழனிசாமி, படிக்க வரும் கல்லூரி மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் தேவையின்றி அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருப்பது உண்மையிலேயே அருவருக்கத்தக்க செயல்.

**வதந்திகள் பரப்பும் பழனிசாமி!**

உயர்நீதிமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு உரிய பதில் அளித்துவிட்ட போதும் தனது சுய அரசியல் ஆதாயத்திற்காக இல்லாத ஒன்றை இருப்பது போல மேலும் மேலும் வதந்திகளை பரப்பிக் கொண்டிருக்கும் பழனிசாமிக்கு கடும் கண்டனம்.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையில் பின்னிருந்த அ.தி.மு.க. பிரமுகர்களை காப்பாற்றவும் அ.தி.மு.க. இளைஞரணியின் பொள்ளாச்சி நகரச் செயலாளராக செயல்பட்டு வந்த முக்கிய குற்றவாளி அருளானந்தத்தை காப்பாற்றவும் பாதிக்கப்பட்ட பெண்களையே அ.தி.மு.க.வினர் பகிரங்கமாக மிரட்டிய கொடூரம் நடந்ததை தமிழ்நாட்டு மக்கள் என்றும் மறக்கவே மாட்டார்கள்.

அதுமட்டுமா? உதவி கேட்டு வந்த பெண்ணை “மெயின் ரோட்டிற்கு வா” என முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரே பேசி பாலியல் தொந்தரவு கொடுத்த அசிங்கமும் அ.தி.மு.க. ஆட்சியில் தானே அரங்கேறியது. இந்த லட்சணத்தில் ஆட்சி நடத்தி விட்டு தற்போது பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர் போல நடிப்பது அபத்தம்.

புதுமைப்பெண் திட்டம், பெண்கள் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை என பெண் கல்விக்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீதும் முதலமைச்சர் மீதும் என்ன அவதூறு பரப்பினாலும் அதை தமிழ்நாட்டு பெண்கள் துளியும் நம்பபோவதில்லை.



எப்.ஐ.ஆர். பதிவு செய்யாத பழனிசாமி அரசு!

எடப்பாடி ஆட்சியில் தனக்கு நேர்ந்த பாலியல் கொடுமைகளை வெளியே வந்து சொல்லவே பயப்பட்ட நிலை இருந்தது. புகார் பெறவே மாட்டார்கள், ஒருவேளை புகாரை பெற்றுக்கொண்டாலும் எப்.ஐ.ஆர். பதிவு செய்ய மாட்டார்கள். அந்த நிலை மாறி தற்போது திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் தைரியமாக வெளியே வந்து தங்களுக்கு நேர்ந்த கொடுமையை சொல்கிறார்கள் என்றால் அது முதலமைச்சர் மீது தமிழ்நாட்டு பெண்கள் வைத்துள்ள நம்பிக்கை தான். அந்த நம்பிக்கையை இந்த திராவிட மாடல் அரசு என்றும் காக்கும்.

**அரசியல் அறத்திற்கு குழி தோண்டும் பழனிசாமி!**

மாணவியின் புகாரை பெற்ற உடனே எவ்வளவு விரைவாக செயல்பட்டு விசாரணை நடத்தி குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். தேவையின்றி அரசியல் செய்வதையும் வதந்திகளை பரப்பி மாணவிகளின் கல்வியோடு விளையாடு வதையும் நிறுத்தி கொள்ளுங்கள்.

நீங்கள் என்னதான் அச்சுறுத்தி பெண்களை வெளியே வராதே, படிக்க வராதே என மறைமுகமாக தடுக்க முயன்றாலும் தமிழ்நாட்டு பெண்கள் தைரியமாக வெளியே வந்து வாழ்வின் உயர்நிலைக்கு செல்வார்கள். அதற்கு இந்த திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

தனக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், படிக்கும் மாணவர்கள் சார்ந்த இந்த சென்ஸிட்டிவ் விவகாரத்தில் அரசியல் செய்து, அரசியல் அறத்தையும் மாண்பையும் குழி தோண்டி புதைத்து விட்டார் பழனிசாமி. அவரது இந்த அற்பத்தனமான செயலை தமிழ்நாட்டு மக்கள் என்றும் மன்னிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்கள் 30.12.2024 அன்று தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 10 மாணவிகளுக்கு பற்றட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, மாணவிகளுக்கு பற்றட்டைகளை (Debit Card) வழங்கினார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி. ஜெயலட்சுமி தமிழ்செல்வன், துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.